
பக்கங்கள் 15

மாலை முரசு

## இன்றும் கோர விபத்து; மூவர் பரிதாப மரணம்!

குருநாகல், நாரம்மல பகுதியில் இன்று காலை இடம்பெற்ற வாகன விபத்தில் மூவர் பலியாகியுள்ளனர். மேலும் ஒருவர் படுகாயம் அடைந்த நிலையில் குருநாகல் 04▶

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 தை 13 சனிக்கிழமை 27.01.2024 அதிர்வு 179




# குழப்பங்களுக்கு மத்தியில் தமிழரசின் பொதுச்செயலராக குகதாசன் நியமனம்

## தேசிய மாநாட்டைத் திடீரென ஒத்திவைத்தார் மாவை

பல்வேறு குழப்பங்களுக்கு மத்தியில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் புதிய பொதுச்செயலாளராக திருகோணமலையைச் சேர்ந்த சண்முகம் குகதாசன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

தமிழரசுக் கட்சியின் புதிய தலைவராக சிவஞானம் சிறீதரன் கடந்த 21ஆம் திகதி நடைபெற்ற கட்சியின் பொதுச் சபைக் கூட்டத்தில் இரகசிய வாக்கெடுப்பு மூலம் தெரிவு செய்யப்பட்டிருந்தார். இந்நிலையில், தமிழரசுக் கட்சியின் புதிய நிர்வாகத்தில் ஏனைய பதவிகளுக்கான தெரிவுக் கூட்டம் இன்று இடம்பெற்றது.

திருகோணமலை, மூன்றாம் கட்டைப் பகுதியில் உள்ள தனியார் விருந்தகம் ஒன்றில் இந்தக் கூட்டம் நடைபெற்றது. 04▶



# சந்திரிகாவின் தலைமையில் புதிய கூட்டணி?

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியால் ஆரம்பிப்பதற்கு உத்தேசித்துள்ள புதிய கூட்டணியின் தலைவராக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவை நியமிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள் ளதுடன், அதற்கு அவர் இணக்கம் தெரிவித்துள்ளார் எனவும் கட்சியின் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை அடிப்படையாகக் கொண்டு புதிய கூட்டணியொன்றை உருவாக்குவதற்கு ஆரம்பிக்கட்ட நடவடிக்கைகள் தற்போது இடம்பெற்று வருகின்றன எனவும், அதனுடன் சம்பந்தப்பட்ட ஏனைய கட்சிகள் மற்றும் அரசியல் பிரமுகர்களுடன் பேச்சு நடத்தப்பட்டு வருகின்றது எனவும் கூறப்படுகின்றது.

புதிய கூட்டமைப்பின் தலைவருக்குத் தனித்து தீர் மானம் மேற்கொள்வதற்கான அதிகாரம் வழங்கப்பட மாட்டாது எனவும், சந்திரிகா குமாரதுங்க பண்டார நாயக்க மற்றும் கூட்டமைப்பில் இணையும் ஏனைய அனைத்துக் கட்சிகளின் தலைவர்களும் உள்ளடங்கும் வகையில் தலைமைத்துவ சபையொன்றை உரு வாக்குவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது எனவும் கட்சி யின் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அந்தக் கூட்டமைப்பின் 50 வீதம் அதிகாரத்தை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி கொண்டிருப்பதுடன் ஏனைய கட்சிகள் மீதமான 50 வீதம் அதிகாரத்தைக் கொண் டிருக்கும் வகையில் தீர்மானிக்கப்பட்டுள்ளது எனவும் மேலும் கூறப்படுகின்றது.

# பசறையில் தீக்கிரையானது கார்



(ராமு தனராஜ்)

மைக்ரோ ரக கார் ஒன்று தீப்பிடித்து எரிந்து முற்றாக சேதமடைந்துள்ளது என்று பசறை பொலிஸார் தெரிவித் தனர்.

கதிர்காமத்தில் இருந்து பதுளை நோக்கி வந்து கொண்டிருந்த மைக்ரோ ரக காரே, பசறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட தொளும்புவத்தை 2ஆம் கட்டைப் பகுதியில் இன்று அதிகாலை 4.30 மணியளவில் இவ்வாறு தீப் பிடிந்து எரிந்து நாசமாகியுள்ளது.

அந்தக் காரில் இருவர் பயணித் தனர் எனவும், காரா தீப்பிடித்து எரிந்த வேளையில் இருவரும் பாதுகாப்பாக கீழே இறங்கினர் எனவும், வாகனத் தில் இருந்த கையடக்கத் தொலை பேசிகள் மற்றும் அவர்களின் உட மைகள் அனைத்தும் முற்றாகத் தீக் கிரையாகியுள்ளன எனவும் பசறை பொலிஸார் மேலும் குறிப்பிட்டனர்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை பசறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.




# ஊடக அடக்குமுறைகளுக்கு எதிராக

# மாபெரும் கறுப்புப் பட்டிப் போராட்டம்

(பழுவூரான், கனகராசா சரவணன்)

கறுப்பு ஜனவரியையொட்டி ஊடக அடக்குமுறைக்கு எதிராகவும், இலங்கையில் கடத்தப்பட்டுக் காணாமல் ஆக்கப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நீதி கோரியும் மாபெரும் கறுப்புப் பட்டிப் போராட்டம் இன்று மட்டக்களப்பு காந்தி பூங்கா வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கான நினைவுத் தூபி முன்பாக இடம்பெற்றது.

மட்டக்களப்புத் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம், மட்டக்களப்பு ஊடக அமையம், கிழக்கிலங்கை பத்திரிகையாளர் சங்கம் ஆகியன இணைந்து இந்தக் கறுப்பு ஜனவரி கண்டனப் போராட்டத்தை ஏற்பாடு செய்திருந்தன.

இந்தக் கண்டன ஆர்ப்பாட்டத்தில் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம், முன்னாள் கிழக்கு மாகாண சபை பிரதித் தவிசாளர் பிரசன்னா இந்திரகுமார், முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் இரா.துரைரத்தினம், மட்டக்களப்பு மாநகர சபை உறுப்பினர்கள், இலங்கை ஆசிரியர் சங்கத்தின் மட்டக்களப்பு மாவட்ட செயலாளர் பொன்னுத்துரை உதயரூபன், சிவில் சமூகத்தைச் சேர்ந்த எஸ்.சிவயோகன், மதத் தலைவர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

இந்தக் கவனயீர்ப்புப் போராட்டத்தில் கலந்துகொண்டவர்கள், "தாக்காதே தாக்கதே ஊடகவியலாளர்களைத் தாக்காதே", "எங்கே? எங்கே? ஊடகவியலாளர் எக்னெலிகொட எங்கே?", "வேண்டும் வேண்டும் சர்வதேச விசாரணை வேண்டும்" போன்ற கோஷங்களை எழுப்பி தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.








# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்



**குழப்பங்களுக்கு...**

முற்பகல் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் இடம்பெற்றது. இதன் போது, தமிழரசுக் கட்சியின் புதிய நிர்வாகக் குழுவை நியமிப்பதற்கான தீர்மானம் எடுக்கப்பட்டது.

அதற்கமைய கட்சியின் பொதுச்செயலாளராக திருகோணமலை மாவட்டக் கிளைத் தலைவர் சண்முகம் குகதாசனை நியமிப்பதற்கு இணக்கம் காணப்பட்டது. அதையடுத்து ஏனைய பதவிகளுக்கும் புதியவர்களின் பெயர்கள் இணக்கத்துடன் தீர்மானிக்கப்பட்டது.

அதையடுத்துப் பொதுச் சபைக் கூட்டம் நடைபெற்றது. அதில் மத்திய செயற்குழுவின் பட்டியலை அப்படியே ஏற்பது என்ற பிரேரணையை சி.சிறீதரன் முன்வைத்தார். அது ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதன்பின்னர் பிற்பகல் பொதுச் சபை மீண்டும் கூடியது.

இந்தச் சந்தர்ப்பத்தில் கட்சியின் புதிய பொதுச்செயலாளராக சண்முகம் குகதாசனை நியமித்தமைக்கு எதிராக அவரின் மாவட்டத்தைச் சேர்ந்த பொதுச் சபை உறுப்பினர்களே போர்க்கொடி தூக்கினார்கள்.

இதையடுத்துப் பல்வேறு குழப்பங்களுக்கு மத்தியில் தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழு நியமித்த புதிய நிர்வாகக் குழுப் பட்டியலை ஏற்பதா? இல்லையா? என்று பொதுச் சபை உறுப்பினர்கள் மத்தியில் பகிரங்க வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

அதன்பிரகாரம் மத்திய செயற்குழு நியமித்த புதிய நிர்வாகக் குழுவுக்கு ஆதரவாக 112 வாக்குகளும், எதிராக 104 வாக்குகளும் கிடைத்தன. அதையடுத்துப் புதிய நிர்வாகக் குழு அங்கீகரிக்கப்பட்டது.

சிவஞானம் சிறீதரன் தலைமையிலான தமிழரசுக் கட்சியின் புதிய நிர்வாகத்தில் பொதுச்செயலாளராக ச.குகதாசனும், சிரேஷ்ட உப தலைவராக சி.வி.கே.சிவஞானமும்,துணைப் பொதுச் செயலாளராக சேவியர் குலநாயகமும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அதேவேளை, இணைப் பொருளாளர்களாக ஞா.ஸ்ரீநேசன், பெ. கனகசபாபதி ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

துணைத் தலைவர்களாக கே.வி. தவராசா, சார்ள்ஸ் நிர்மலநாதன், த.கலையரசன், பா.அரியநேத்திரன், ப.சத்தியலிங்கம் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இணைச் செயலாளர்களாக திருமதி சாந்தி ஸ்ரீஸ்கந்தராஜா, ரஞ்சினி கனகராசா, த.குருகுலராஜா, ஈ.சரவணபவன், இரா.சாணக்கியன், சி.சிவமோகன் ஆகியோர் தெரிவு செய்யப் பட்டுள்ளனர்.

செயற்குழு உறுப்பினர்களாக எம்.ஏ.சுமந்திரன், கருணாநிதி, பரஞ்சோதி, சயந்தன், ரவிகரன், இரட்ணவடிவேல், யோகேஸ்வரன், கோடீஸ்வரன், கனகசிங்கம், ஜெயக்குமார் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

எனினும், தமிழரசுக் கட்சியின் பொதுச் சபைக் கூட்டம் இன்று மாலை நிறைவடைந்த பின்னர் நாளை நடைபெறவிருந்த கட்சியின் தேசிய மாநாட்டைக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா திடீரென ஒத்திவைத்துள்ளார். கட்சியின் புதிய தலைவர் உள்ளிட்ட புதிய நிர்வாகக் குழுவினர் நாளைய மாநாட்டில் அறிமுகம் செய்யப்படவிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

---

**இன்றும் கோர...**

போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

நாரம்மல விகாரைக்கு அருகில் உள்ள வளைவு பகுதியிலேயே இன்று காலை 6.30 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.ஓட்டோவும் லொறியும் மோதியில் ஓட்டோவில் பயணித்த நால்வரில் இரு பெண்கள் உள்ளிட்ட மூவர் உயிரிழந்துள்ளனர். மேலும் ஒருவர் படுகாயம் அடைந்துள்ளார்.

விபத்து தொடர்பான விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

விபத்து தொடர்பில் லொறியின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார்.





# “தமிழ் அரசியல் தலைமைகளின் கவனத்திற்கும்”

# வடக்கு, கிழக்கு ஒருங்கிணைப்புக் குழு துண்டுப் பிரசுரம்

(அப்துல்சலாம் யாசீம்)

அனைத்து தமிழ் அரசியல் தலைமைத்துவங்களின் கவனத்திற்கும் என்ற தலைப்பில் திருகோணமலையில் இன்று துண்டு பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன.


வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்பு குழுவினால் இந்த துண்டு பிரசுரம் வழங்கி வைக்கப்பட்டது.

இலங்கைத் தமிழரசு கட்சியின் 17 ஆவது தேசிய மாநாடு இன்று திருகோணமலையில் இடம்பெற்ற நிலையில், அங்கு மேற்படி குழுவினர் ஒவ்வொரு அரசியல்வாதிகளின் கைகளுக்கும் கிடைக்கக் கூடிய விதத்தில் இந்த துண்டுப் பிரசுரத்தை வழங்கியுள்ளனர்.

அந்த துண்டு பிரசுரத்தில், “தமிழ் தேசிய அரசியலின் வரலாற்றிலும் தமிழரசு கட்சியின் வரலாற்றிலும் முதல் முறையாக வாக்கெடுப்பு மூலமான கட்சித் தலைமை தெரிவு கடந்த வாரம் நடைபெற்றுள்ளது. இந்த ஜனநாயக பண்பை வரவேற்பதோடு, இது நிலைத்திட வேண்டுமெனவும் அலாவுகின்றோம்.

இலங்கை நாட்டின் உள்ளக அரசியல் பிராந்திய அரசியல் மற்றும் சர்வதேச சூழல் ஆகிய சிக்கல் மிக்கதாக காணப்படும் தற்போதைய சூழலில், தமிழரசி கட்சியின் தலைமைத்துவத்தை பொறுப்பேற்றிருக்கும் சிவஞானம் சிறிதரனின் முன்னால் பாரிய கடப்பாடுகள் உள்ளன.” உள்ளிட்ட விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.







# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## முறையற்ற முறையில் வந்த சட்டம்

இணையதளங்கள், சமூக ஊடகங்கள் போன்றவற்றைக் கட்டுப்படுத்தும் இலக்கோடு இலங்கை அரசு கொண்டுவந்து அவசர அவசரமாக - குறுக்கு வழி முறைகளில் - நாடாளுமன்றத்தில் நிறைவேற்றிய நிகழ்நிலை காப்புச் சட்டம் பெரும் சர்ச்சைகளை கிளப்பி விட்டு இருக்கின்றது.

சட்ட முறைகளுக்கு மாறாக, முறையற்ற விதத்தில், அது நிறைவேற்றப்பட்டிருப்பதான குற்றச்சாட்டு ஒரு புறம்.

அந்தச் சட்டத்தின் மூலம் அடக்குமுறை ஏற்படுத்தப்படலாம் என்ற அச்சத்தில் அதற்கு எதிராக உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் கிளம்பி வரும் எதிர்ப்புக்கள் மறுபுறமாக இந்த சர்ச்சை பெரும் சூடு பிடித்திருக்கின்றது.

பொதுவாக ஒரு சட்டமூலம் நாடாளுமன்றுக்கு வரும் முன்னர் அது வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டு முன்னறிவித்தல் கொடுக்கப்படும். அதனை ஆட்சேபிக்கும் பிரஜை எவரும் அந்தச் சட்டமூலம் குறித்து உயர் நீதிமன்றத்தில் விண்ணப்பிக்கலாம். அத்தகைய விண்ணப்பங்களை உயர் நீதிமன்றம் விசாரிக்கும். சட்டமூலத்தைப் பரிசீலிக்கும்.

அரசமைப்பின் பிரதான - முக்கிய - அடிப்படை - ஏற்பாடுகளுக்கு முரணாக அந்தச் சட்டமூலம் அல்லது அதன் சில பிரிவுகள் இருக்குமாயின் அவற்றை அப்படியே நிறைவேற்றுவதாயின் நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை உறுப்பினர்களின் ஆதரவுடன் அங்கீகாரம் பெறுவதோடு, சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றின் மூலம் மக்கள் அனுமதியும் பெறப்பட வேண்டும் என்று நீதிமன்றம் உத்தரவிடும்.

அரசமைப்பின் பிரதான - முக்கிய - அடிப்படை - ஏற்பாடுகள் தவிர்ந்த அரசமைப்பின் பிற விடயங்களுக்கு முரண்பாடாக அச்சட்டமூலம் அல்லது அதன் பிரிவுகள் இருந்தால் அதனை நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை உறுப்பினர்களின் ஆதரவுடன்தான் நிறைவேற்ற வேண்டுமென உயர் நீதிமன்றம் வழிகாட்டும்.

அரசமைப்பு ஏற்பாடுகளுக்கு அந்தச் சட்டம் மூலம் முரணாக அமையாதவிடத்து அந்தச் சட்டமூலத்தை நாடாளுமன்றத்தின் சாதாரண பெரும்பான்மை மூலம் நிறைவேற்றிச் சட்டமாக்கலாமென நீதிமன்றம் வழிகாட்டும்.

இந்த மூன்று வித வழிகாட்டல்களை ஒட்டிய விடயங்களில் சாதாரண பெரும்பான்மையுடன்அல்லது மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையுடன் சட்டங்களை நிறைவேற்றுவதற்கு அந்தச் சட்டமூலங்களில் என்ன மாற்றங்களைச் செய்ய வேண்டும் என்பதையும் நீதிமன்றம் தனது பரிந்துரையில் வெளிப்படுத்தி இருக்கும். அந்த விடயத்தில்தான் புகுந்து விளையாடி இருக்கின்றது அரசு.

அரசு சமர்ப்பித்த நிகழ்நிலை காப்புச் சட்டமூலம் மக்களின் கருத்து வெளியிடும் சுதந்திரத்தில் தலையிட்டு கட்டுப்படுத்தும் அடக்குமுறை ஏற்பாடு என சிவில், மனித உரிமைகள் அமைப்புகள் பலவும் குரல் எழுப்பின. சர்வதேச அமைப்புக்களும் கண்டனம் தெரிவித்தன. உயர் நீதிமன்றத்தில் பல ஆட்சேபனை மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

இந்த விடயங்களை விலாவாரியாக விசாரணை செய்த உயர்நீதிமன்றம், அரசு சமர்ப்பித்த சட்டமூலத்தில் 34 அம்சங்கள் மாற்றப்பட்டால் மட்டுமே சாதாரண நாடாளுமன்றப் பெரும்பான்மை ஆதரவுடன் அதனை நிறைவேற்றிச் சட்டமாக்க முடியும் எனத் தீர்ப்பளித்திருந்தது.

அந்த திருத்தங்கள் சட்டமூலத்தின் புதிய வடிவத்தில் செய்யப்பட்டுள்ளனவா என்பதை ஆராய உரிய கால அவகாசம் வழங்கப்பட வேண்டும் என எதிர்க்கட்சிகள் வலியுறுத்திய போதும், அதனை உதாசீனம் செய்துவிட்டு, நாடாளுமன்றத்தில் தனக்கிருந்த சாதாரண பெரும்பான்மையை வைத்து அந்தச் சட்டத்தை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றி விட்டதாக அரசு அறிவித்துள்ளது.

ஆனால், "உயர் நீதிமன்றம் சுட்டிக்காட்டிய வழிகாட்டலுக்கு மாறாக 13 விடயங்கள் திருத்தப்படாத நிலையில் இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டு விட்டதாக அரசு அறிவித்துள்ளது. அதனால் இந்தச் சட்டம் முறையாக நிறைவேற்றப்படவில்லை. இதில் சபாநாயகர் ஒப்பமிடக்கூடாது"- என்று ஜனாதிபதி சட்டத்தரணியும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் கூறியிருக்கின்றார்.

இப்படி உயர் நீதிமன்றம் பரிந்துரைத்த திருத்தங்களைச் செய்யாமல் சட்டம் நிறைவேறி இருப்பதாக நாடாளுமன்றத்தில் அறிவிக்கப்பட்டால், அது தொடர்பில் சட்டரீதியாக எடுக்கக் கூடிய நடவடிக்கை யாது என்பது தொடர்பில் தெளிவான சட்ட ஏற்பாடுகளோ, முன்மாதிரியான வழிகாட்டல்களோ, வழிகாட்டல் தீர்ப்புகளோ இல்லை என்பதால் இந்தச் சர்ச்சையை எப்படிக் கையாள்வது என்ற குழப்ப நிலை நாடாளுமன்ற வட்டாரங்களில் நிலவுவதாகத் தெரிகின்றது.

இதற்கிடையில் -

இந்தச் சட்டம் கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரத்தை முறையற்ற விதத்தில் பாதித்து, அடக்குமுறை நடவடிக்கைகளுக்கு வழி ஏற்படுத்தும் என்ற கருத்தியலுக்கு மத்தியில், அமெரிக்கா, பிரிட்டன், கனடா, ஆஸ்திரேலியா போன்ற நாடுகளின் தூதுவர்களின் கண்டனத்திற்கும் ஆட்சேபத்துக்கும் கூட அது உள்ளாகி இருக்கின்றது.

இந்தச் சட்டமூலத்திற்கு எதிராக உள்நாட்டில் மக்கள் எதிர்ப்புப் போராட்டங்கள் உருவாகித் தீவிரமடையும் நிலையும் தென்படுகின்றது.

குறுக்கு வழியில் இச்சட்டத்தை நிறைவேற்றி இருக்கும் அரசின் நடவடிக்கை பல்வேறு சிக்கல்களை உருவாக்கப் போகின்றது என்பது திண்ணம்.

# இணையவழி பாதுகாப்பு சட்டமூலம் சட்ட ஆய்வுகளுக்கு உட்படுத்தப்படும்!



இணையவழி பாதுகாப்பு சட்டமூலம் அதிகாரப்பூர்வ சட்டமாக அறிவித்து கையெழுத்திடப்படுவதற்கு முன்னர் மேலும் பல சட்ட ஆய்வுகளுக்கு உட்படுத்தப்படும் என சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார்.

உயர் நீதிமன்ற உத்தரவுக்கமைய சட்டவாக்கத்தின் போது உள்வாங்கப்பட்ட அனைத்து திருத்தங்களும் உரிய முறையில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளனவா என்பது குறித்து சட்டமா அதிபர் திணைக்களம் விசாரணைகளை நடத்துவதற்கு தீர்மானித்துள்ளதாகவும் அவர் அறிவித்துள்ளார்.

கடந்த 24 ஆம் திகதி இணையவழி பாதுகாப்பு சட்டமூலம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

இதனைத் தொடர்ந்து பல சர்ச்சைகள் எழுந்துள்ள நிலையில் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன இதுதொடர்பில் கருத்து தெரிவித்துள்ளார்.

சட்ட நடைமுறைகளுக்கு இணங்குவதை உறுதி செய்வதற்கும், சாத்தியமான குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கும் சட்டமா அதிபர் அலுவலகத்தினால் ஒவ்வொரு சட்டமூலமும் ஆய்வுக்களுக்கு உட்படுத்தப்படும் என்றும் சபாநாயகர் இதன்போது உறுதியளித்துள்ளார்.

மேலும், சட்டமா அதிபரினால் உறுதிப்படுத்தப்பட்ட பின்னர் நாடாளுமன்ற அதிகாரிகள் குழு இரண்டாவது மீளாய்வுகளை மேற்கொண்ட பின்னரே சபாநாயகர் கையெழுத்திடவுள்ளதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, இணையவழி பாதுகாப்பு சட்டமூலத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பு கடந்த 24 ஆம் திகதி 46 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.

அதன்படி, குறித்த சட்டமூலத்துக்கு ஆதரவாக 108 வாக்குகளும் எதிராக 62 வாக்குகளும் அளிக்கப்பட்டன.

இந்த சட்டமூலம் நிறைவேறியதன் ஊடாக இணையவழி பாதுகாப்பு ஆணைக்குழு ஒன்று ஸ்தாபிக்கப்படவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டது.

எவ்வாறாயினும், சபை முதல்வர் சட்டமூலம் தொடர்பான திருத்தங்களை முன்வைத்திருந்தார்.

இந்த திருத்தங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிலையில் இணையவழி பாதுகாப்பு சட்டமூலத்தின் இரண்டாம் வாசிப்பு திருத்தங்களுடன் நிறைவேற்றப்பட்டுள்ளதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன நாடாளுமன்றத்துக்கு அறிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# இலங்கையின் சுதந்திர தினத்தை கறுப்பு நாளாக அனுஷ்டிக்க முடிவு

## காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கம் அறிவிப்பு

(பழுவூரான்)




இலங்கையின் சுதந்திர தினத்தை கறுப்பு நாளாக அனுஷ்டிக்க முடிவு செய்துள்ளோம் என காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தின் மட்டக்களப்பு மாவட்டத் தலைவி திருமதி சகாயராஜன் சுகந்தி தெரிவித்தார்.

எதிர்வரும் பெப்ரவரி நான்காம் திகதி அனுஷ்டிக்கப்படவுள்ள கறுப்பு நாள் தொடர்பாக ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இந்த ஊடக சந்திப்பு இன்று சனிக்கிழமை மட்டு. ஊடக அமையத்தில் இடம்பெற்றது.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

"எமது நாடு சுதந்திரம் பெற்ற போதிலும் அந்தச் சுதந்திரத்தை முழுமையாக அனுபவிக்கக் கூடிய வாய்ப்பு எமக்கு வழங்கப்படவில்லை.

இந்த நிலையில் எதிர்வரும் நான்காம் திகதி வடக்கு- கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்களால் மட்டக்களப்பு கல்லடிப் பாலத்துக்கருகில் ஆரம்பிக்கப்படும் பேரணியானது நகர வீதியூடாக அரசடி மணிக்கூட்டுக் கோபுரத்தை அடைந்து, அங்கிருந்து மட்டக்களப்பு காந்திப் பூங்கா வளாகத்தைச் சென்றடையவுள்ளது.

அங்கு கவனயீர்ப்புப் போராட்டமொன்று முன்னெடுக்கப்படவுள்ளது.

இந்த பேரணி மற்றும் கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஆசிரியர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், ஆட்டோ சாரதிகள், விவசாய அமைப்புக்கள், ஊடகவியலாளர்கள் மற்றும் பொது அமைப்புக்கள் அணி திரண்டு வந்து போராட்டம் வெற்றி பெற அழைப்பு விடுக்கின்றேன்."– என்றார்.

இந்த ஊடக சந்திப்பில் அம்பாறை மாவட்ட காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத் தலைவி திருமதி தம்பிராசா செல்வராணி மற்றும் திருமதி செபஸ்தியான் தேவி ஆகியோர் கலந்து கொண்டனர்.





# ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கிளை புனரமைப்புக் கூட்டம்

சம்மாந்துறை தைக்காப்பள்ளி வட்டாரத்தில் சம்மாந்துறை – 1 கிராம சேவகர் பிரிவுக்கான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கிளை புனரமைப்பு கூட்டம் நேற்று இடம்பெற்றது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதி தலைவரும், முன்னாள் நாடாளு மன்ற உறுப்பினருமான எம்.ஐ.எம். மன்சூர் தலைமையில் இந்த கூட்டம் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதி செயலாளர் மன்சூர் ஏ காதர், பிரதி தேசிய அமைப்பாளரும், முன்னாள் கிழக்கு மாகாண அமைச் சருமான எம்.எஸ்.உதுமாலெப்பை, மாவட்ட குழுவின் செயலாளரும், முன்னாள் கல்முனை மாநகர சபை உறுப்பினருமான ,ஏ.சீ.சமால்டீன், அரசியல் அதி உயர்பீட உறுப்பினர் ஏ.எம்.ஏ.அஸீஸ், முன்னாள் சம்மாந் துறை பிரதேச சபை உறுப்பினர் எஸ். நளீம் , சம்மாந்துறை தைக்காப்பள்ளி வட்டார வேட்பாளர் அர்ஷத் இஸ்மா யில் மற்றும் கட்சிப் பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.





# இளைஞர், யுவதிகளை வலுப்படுத்தும் நிகழ்வு





(அஸ்ஹர் இப்றாஹிம்)

காரைதீவு பிரதேச செயலாளர் எஸ்.ஜெகராஜனின் வழிகாட்டலின் கீழ் புயுகுளுமு ன் அனுசரணையில் பிர தேச இளைஞர் யுவதிகளை வலுப் படுத்தல் எனும் தொனிப்பொருளில் பிரதேசமட்ட இளைஞர் மன்றம் உரு வாக்கப்பட்டுள்ளது.

இந்த மன்றத்தின் அங்கத்தவர் களுக்கான ஆரம்ப நிகழ்வு நேற்று வெள்ளிக்கிழமை காரைதீவு பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம் பெற்றது.

இதன்போது ”இளைஞர்கள் சரியான பாதையில் ஈடுபடுவதற்கான தொழில் வழிகாட்டல்” எனும் தலைப்பிலான விரிவுரை வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் GAFSO இந்நிகழ்ச்சி திட்டத்தின் பணிப்பாளர் ஏ.ஜே. காமில் இம்டாட் மற்றும் திட்ட ஒருங்கிணைப் பாளர், காரைதீவு பிரதேச செயலக அனர்த்த நிவாரண சேவைகள் உத்தியோகத்தர்கள் மற்றும் அபிவி ருத்தி உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



# காரைதீவு பிரதேச செயலகத்தின் நலன்புரி சங்க ஒன்று கூடல்

(எம்.ஏ.ஏ.அக்தார்)

காரைதீவு பிரதேச செயலக நலன்புரி சங்கத்தின் வருடாந்த ஒன்று கூடல் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இதன்போது, இடமாற்றம் பெற்றுச் சென்ற உத்தியோகத்தர்கள் கௌரவிப்பும், புலமைப் பரீட்சை, க.பொ.த. சாதாரண பரீட்சை சாதனையாளர்கள், பல்கலைக்கழகம் சென்ற நலன்புரி சங்க உத்தியோகத்தர்கள் கௌரவிப்பும், சிறந்த சேவையாற்றி ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்களுக்கான கௌரவிப்பும் மற்றும் கலைநிகழ்வுகள் என்பன இடம்பெற்றன.

காரைதீவு பிரதேச செயலாளர் சிவ.ஜெகராஜன் தலைமையில் இடம்பெற்ற மேற்படி நிகழ்வில் அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வீ.ஜெகதீசன் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.











# தூய காணிக்கை அன்னை ஆலயத்தின் 400ஆவது வருடாந்த கொடியேற்றம்

(பழுவூரான்)

மட்டக்களப்பு தாண்டவன்வெளி தூய காணிக்கை அன்னை ஆலயத்தின் 400 ஆவது வருடாந்த கொடியேற்றம் நேற்று வெள்ளிக்கிழமை அடியவர்கள் செப ஒலி எழுப்ப நிகழ்த்தப்பட்டது.

ஆலய பங்குத் தந்தை வணபிதா ஜூலியன் பிரான்சிஸ் தலைமையில் நடைபெற்ற கொடியேற்றத் திருவிழா வில் ஆலய பங்கைச் சேர்ந்த பொது மக்கள் கலந்து கொண்டனர்.

கொடியேற்றத்துடன் ஆரம்பமான திருவிழா 10 தினங்கள் இடம்பெற்று எதிர்வரும் 04 ஆம் திகதி கொடியிறக் கத்துடன் நிறைவுபெறவுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள புராதன தேவாலயம் இதுவென்பது குறிப்பிடத்தக்கது.















# “தமிழகத்தில் பாஜக என்பது பூஜ்ஜியம்” சிறுத்தைகள் மாநாட்டில் ஸ்டாலின் உரை

தமிழகத்தில் பா.ஜ.க. என்பது பூஜ்ஜியம் என்று முதல்வர் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

திருச்சி சிறுகனூரில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சி மாநாடு நேற்று மாலை நடைபெற்றது. இதில் முதல்வர் மு.க.ஸ்டாலின் உள்ளிட்ட பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்கள் பங்கேற்றனர்.

இந்த மாநாட்டில் முதல்வர் ஸ்டாலின் உரையாற்றுகையில்,

“இந்தியாவை உண்மையான கூட்டாட்சி நாடாக மாற்ற வேண்டிய கடமையும், பொறுப்பும் நமக்கு உள்ளது. ஒன்றியத்தில் கூட்டாட்சி அரசையும், மாநிலத்தில் சுயாட்சி அரசையும் உருவாக்க வேண்டும். அதனால் தான் குடியரசு நாளன்று இந்த மாநாடு கூட்டப்பட்டுள்ளது. மக்கள் ஆட்சி மாண்புகள் காக்கப்பட ஜனநாயகம் வென்றால் தான் கூட்டாட்சி மலரும்.

அதற்கு தொடக்கமா பா.ஜ.க. ஆட்சி அகற்றப்பட வேண்டும். தமிழகத்தில் பா.ஜ.க. என்பது பூஜ்ஜியம். அதனால் தமிழகத்தில் பா.ஜ.க. குறித்து கவலை கொள்ள வேண்டியதில்லை. தமிழகத்தில் மட்டுமே பா.ஜ.கவை வீழ்த்தினால் போதாது. அகில இந்தியா முழுக்க பா.ஜ.கவை வீழ்த்த வேண்டும். அதற்கான அடித்தளம் தான் இண்டியா கூட்டணி. ஒன்றியத்தில் உள்ள பா.ஜ.க. ஆட்சியை வீழ்த்த வேண்டுமென்ற இலக்க கொண்டுள்ள கட்சிகள் அனைத்தும் இந்த கூட்டணியில்



இணைந்து உள்ளது. பா.ஜ.க. எனும் தனிப்பட்ட கட்சிக்கு எதிரான கூட்டணியாக இதை சுருக்கிவிட முடியாது.

இந்தியாவின் ஜனநாயகத்தை, மக்களாட்சியை, மதச்சார்பின்மை, பன்முகத்தன்மை, ஒடுக்கப்பட்ட மக்களை காக்க வேண்டுமென்றால் பா.ஜ.க. மீண்டும் ஒருமுறை ஆட்சிக்கு வரக்கூடாது. இதுதான் நமது இலக்கு.

பா.ஜ.க. மீண்டும் ஆட்சிக்கு வந்தால் இந்தியா என்ற கூட்டாட்சி அமைப்பு இருக்காது. ஜனநாயகம் இருக்காது. மாநில உரிமைகள், நாடாளுமன்ற நடைமுறையே இருக்காது. இதை எல்லோரும் உணர்ந்து கொள்ள வேண்டும்.” – என்றார்.

# விஜயகாந்துக்கு பத்ம பூஷண் விருது காலம் கடந்து வழங்கப்பட்டுள்ளது

## பிரேமலதா கருத்து

மறைந்த நடிகரும், தே.மு.தி.க. தலைவருமான விஜயகாந்துக்கு காலம் கடந்து பத்ம பூஷண் விருது அறிவிக்கப்பட்டுள்ளது என அவரது மனைவியும் கட்சியின் பொதுச்செயலாளருமான பிரேமலதா தெரிவித்துள்ளார்.

சென்னை கோயம்பேட்டில் உள்ள தே.மு.தி.க. தலைமையகத்தில் உள்ள விஜயகாந்த் நினைவிடத்தில், அவரது 30 ஆம் நாள் நினைவு நிகழ்ச்சி நேற்று அனுசரிக்கப்பட்டது. குடியரசு தினம் என்பதால் விஜயகாந்த் நினைவிடம் தேசியக் கொடியால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. அங்கு விஜயகாந்த் மனைவி பிரேமலதா, மகன்கள் விஜயபிரபாகரன், சண்முகபாண்டியன், தே.மு.தி.க. துணை செயலாளர்கள் எல்.கே.சுதீஷ், பார்த்தசாரதி உள்ளிட்ட நிர்வாகிகள் அஞ்சலி செலுத்தினர். இதேபோல் பல்வேறு பகுதிகளில் இருந்து வந்திருந்த மாற்றுத் திறனாளிகள், பொதுமக்கள் என பலரும் அஞ்சலி செலுத்தினர்.

இதனிடையே, விஜயகாந்துக்கு பத்ம பூஷண் விருது அறிவிக்கப்பட்டதையொட்டி, அவரது குடும்பத்தினரை பா.ஜ.க. தேசிய மகளிரணி தலைவர் வானதிசீனிவாசன் நேற்று சந்தித்து வாழ்த்து தெரிவித்தார். பின்னர் செய்தியாளர்களிடம் வானதி சீனிவாசன் கூறும்போது, “விஜயகாந்த் சினிமாவிலும், அரசியலிலும் அளித்த பங்களிப்புக்காக பொருத்தமான நேரத்தில் பத்ம பூஷண் விருது வழங்கியதற்காக பிரதமர் நரேந்திர மோடிக்கு நன்றி தெரிவிக்கிறோம். அவரது குடும்ப உறுப்பினர்களைச் சந்தித்து, வாழ்த்து செய்தியோடு ஆறுதலை தெரிவித்தோம்” என்றார்.

இதுதொடர்பில் பிரேமலதா கூறுகையில்,

“நேற்று முன்தினம் காலையிலேயே மத்திய உள்துறை அமைச்சகம் சார்பில் விஜயகாந்துக்கு பத்ம பூஷண் விருது அறிவிக்கப்பட உள்ளதாக தகவல் தெரிவிக்கப்பட்டது. தற்போது, காலம் கடந்து, காலன் எடுத்துச் சென்றபிறகு



விஜயகாந்துக்கு விருது கிடைத்துள்ளது.

அவர் இருந்த காலத்திலேயே இந்த விருது கிடைத்திருந்தால் அவரை நேசிக்கும் அத்தனை நல்ல உள்ளங்களும் மிகவும் மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டிருப்போம். எனினும், இந்த கௌரவமான விருதுக்கு மத்திய அரசுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறோம். இந்த விருதை விஜயகாந்த் மீது அன்பு கொண்ட அனைவருக்கும் சமர்ப்பிக்கிறோம்” –என்றார்.



# பவதாரணியின் உடல் இன்று நல்லடக்கம்!

தேனி மாவட்டம் கம்பம் அருகே உள்ள லோயர் கேம்ப்பிள் இளையராஜாவின் மகள் பவதாரணியின் உடலை நல்லடக்கம் செய்வதற்கான முன்னேற்பாட்டு பணிகளை தீவிரமாக மேற்கொள்ளப்படுகின்றன என தெரிவிக்கப்படுகிறது.

கல்லீரல் புற்றுநோயால் பாதிக்கப்பட்டிருந்த பவதாரணி கொழும்பில் உள்ள தனியார் வைத்தியசாலையில் சிகிச்சைப் பெற்று வந்த நிலையில் சிகிச்சைப் பலனின்றி இலங்கையில் காலமானார்.

25 ஆம் திகதி மாலை 5.30 மணியளவில் உயிரிழந்த பவதாரணியின் உடல் நேற்று இந்தியா எடுத்து செல்லப்பட்டது.

இதனை தொடர்ந்து தியாகராயநகரில் உள்ள இளையராஜா வீட்டில் பொதுமக்கள் மற்றும் திரையுலகினர் அஞ்சலிக்காக அவரது உடல் வைக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில், தேனி மாவட்டம் கூடலூர் அருகே உள்ள லோயர் கேம்பில் உள்ள இளையராஜாவிற்கு சொந்தமான பண்ணை வீட்டில் பவதாரணி உடலை நல்லடக்கம் செய்வதற்காக பந்தல் அமைக்கும் பணி மற்றும் சமுதாய முறைப்படி அவரது உடலை நல்லடக்கம் செய்யும் பணிகளை தொழிலாளர்கள் தீவிரமாக செய்து வருகின்றனர்.












# ஹவுதி படையினரின் தொடர் தாக்குதல்களால் சூயஸ் கால்வாய் வர்த்தகப் போக்குவரத்து பாதிப்பு

ஹவுதி படையினரின் தொடர் தாக்குதலினால் முக்கியத்துவம் வாய்ந்த சூயஸ் கால்வாயின் வர்த்தகப்போக்குவரத்து வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளதாக ஐ.நாவின் வர்த்தகப்பிரிவு தெரிவித்துள்ளது.

அதன்படி, சூயஸ் கால்வாயில் வர்த்தகப் போக்குவரத்தானது ஏறத்தாழ 42 சதவீதம் சரிந்துள்ளதாக ஐ.நா.வின் வர்த்தகப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

இது தொடர்பான அறிக்கையொன்றினையும் அந்த அமைப்பின் தலைவர் ஜோன் ஹாஃப்மன் வெளியிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில், “சர்வதேச அரசியல் சூழல் மற்றும் பருவநிலை மாற்றங்களால் இதுபோல் கடல் வணிகம் பெரிதும் பாதிக்கப்படுகிறது.

இவ்வாறு கடல் வணிகம் பாதிக்கப்படுவதனால் உணவுப் பொருள்களின் விலைகள் அதிகரிக்கும் அபாயம் உருவாகும் வாய்ப்புள்ளது.

இதன் விளைவாக உலக பொருளாதாரமும் பெருமளவில் வீழ்ச்சியடையும்.” என குறிப்பிடப்பட்டுள்ளது.

# இங்கிலாந்து மன்னர் 3ஆம் சார்லஸ் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்



இங்கிலாந்து மன்னர் 3 ஆம் சார்ல்ஸ் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என செய்திகள் வெளியாகியுள்ளன.

அதன்படி, நேற்றைய தினம் சார்ல்ஸ் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

75 வயதான சார்ல்ஸ் “புராஸ்டேட்“ அறுவை சிகிச்சையினை மேற்கொள்வதற்காகவே லண்டனில் உள்ள தனியார் வைத்தியசாலை ஒன்றில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அங்கு அவருக்கு அறுவை சிகிச்சை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வாரம் சார்ல்ஸின் மருமகளும், இளவரசியுமான கேத் இதே வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

அறுவை சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட கேத்துக்கு சத்திரசிகிச்சை முடிவடைந்து வைத்தியசாலையிலேயே தங்கியிருக்கிறார். அவரை நேற்று சார்ல்ஸ் வைத்தியசாலையில் வைத்து சந்தித்துள்ளார்.

அதனைத் தொடர்ந்து மன்னர் சார்ல்ஸ் சத்திரசிகிச்சைக்காக அதே வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

# பெண் பத்திரிகையாளரின் அவதூறு வழக்கு: நஷ்ட ஈடு வழங்குமாறு ட்ரம்புக்கு உத்தரவு



அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் 83 மில்லியன் டொலர் நஷ்ட ஈடு வழங்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

பெண் பத்திரிகையாளர் ஜீன் கரோல் தொடர்ந்த அவதூறு வழக்கிலேயே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

பொதுவெளியில் டொனால்ட் ட்ரம்ப் தன்னை அவமானப்படுத்தினார் என பெண் பத்திரிகையாளர் ஜீன் கரோல் என்பவர் நியூயோர்க் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார்.

இந்த வழக்கில் 10 மில்லியன் டொலர் நஷ்ட ஈடு கோரப்பட்டது. இந்த வழக்கை விசாரித்த நியூயோர்க் நீதிமன்றம் 83 மில்லியன் டொலர் நஷ்ட ஈடு வழங்க ட்ரம்புக்கு உத்தரவிட்டுள்ளது.

ஜீன் கரோல் கேட்டதை விட 8 மடங்கு அதிகமாக நீதிமன்றம் நஷ்ட ஈடு வழங்க உத்தரவு பிறப்பித்துள்ளது.

அதை எதிர்த்து மேல்முறையீடு செய்யப்படும் என டொனால்ட் ட்ரம்ப் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# ஸ்ரீதண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலின் வருடாந்த பிரம்மோற்சவமும் முத்தேர் பவனியும்

(எஸ் சதீஸ்)

பொகவந்தலாவ நகர் ஈழத்து பழனி அருள்மிகு ஸ்ரீதண்டாயுதபாணி திருக்கோவிலின் 88 ஆம் ஆண்டு வருடாந்த பிரம்மோற்சவமும் முத்தேர் பவனியும் இன்று இடம்பெற்றது

வசந்த மண்டப பூஜை கிரியைகள் பிரதிஷ்டா கிரியா ஜோதி ஆகம பிரவீனன் சிவ ஸ்ரீ சிதம்பர கிருஷ்ண மூர்த்தி சிவாச்சாரியார், பா.சிவானந்த சர்ம. சந்தரகுமார குருக்கள் ஆகியோரின் தலைமையில் இடம்பெற்றன.

அதனைத் தொடர்ந்து விநாயகர், முருகப்பெருமான், ராஜ ராஜேஸ்வரி அம்பாள் ஆகிய தெய்வங்கள் எழுந்தருளியுள்ள முத்தேர் பவனி ஆரம்பமானது.

முத்தேர் பவனியில் பெருந்திரளான பக்த அடியார்கள் கலந்துகொண்டனர்.









# பாடசாலை மாணவர்களுக்கான உணவு விலையில் அதிகரிப்பு

பாடசாலை மாணவர் ஒருவரின் உணவுக்காக தற்போது வழங்கப்படும் 85 ரூபாயை 115 ரூபாயாக அதிகரிப்பது தொடர்பில் கல்வி அமைச்சு கவனம் செலுத்தியுள்ளது.

அத்தியாவசிய உணவுப் பொருள்களின் விலையேற்றத்தினால் இந்த தீர்மானம் எட்டப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் இது தொடர்பில் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றுள்ளன. நிதியமைச்சின் பிரதிநிதிகளுடனும் கலந்துரையாடப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில், இது தொடர்பிலான இறுதித் தீர்மானம் அடுத்தவாரமளவில் எடுக்கப்படும் என்றும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை, 100,000 பாடசாலை மாணவர்களுக்கு இலவச மதிய உணவு தற்போது வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



# சோதனை நடவடிக்கையில் மேலும் 818 பேர் கைது

நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்படும் விசேட சோதனை நடவடிக்கையின் கீழ், இன்று அதிகாலையுடன் நிறைவடைந்த கடந்த 24 மணி நேரத்தில் 818 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களில் போதைப்பொருள் குற்றச்சாட்டுக்களுடன் தொடர்புடைய 554 பேரும், குற்றப் புலனாய்வு பிரிவினால் அனுப்பப்பட்ட பட்டியலில் உள்ள 264 பேரும் அடங்குகின்றனர் என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

அத்துடன், கைதானவர்களில் போதைப்பொருட்களுக்கு அடிமையான ஒருவர் புனர்வாழ்வு மையத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.



# அம்பாறை - மகா ஓயா வீதி செப்பனிடும் பணிகள் அமைச்சர் பந்துல தலைமையில் ஆரம்பிக்கப்பட்டன

(அஸ்ஹர் இப்றாஹிம்)

கிழக்கு மாகாணத்தின் அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களை உள்ளடக்கும் அம்பாறை முதல் மகா ஓயா வரையிலான பிரதான வீதி கார்பட் வீதியாக செப்பனிடும் பணிகள் நெடுஞ் சாலைகள் மற்றும் ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்த்தனவி னால் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

மேற்படி திட்டம் கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சரும், மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழு தலைவருமான சிவனேசத்துரை சந்திரகாந்தனின் வேண்டுகோளுக் கிணங்க அம்பாறை மற்றும் மட்டக் களப்பு மாவட்டங்களுக்கு வழங்கப் பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.



ஆரம்ப நிகழ்வுகளில் திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் டபிள்யூ.டீ.வீரசிங்க, சிவனேசத் துரை சந்திரகாந்தனின் பிரத்தியேக செயலாளர் பூபாலப்பிள்ளை பிரசாந் தன், மாவட்ட அமைப்பாளர் என்.திரு நாவுக்கரசி மற்றும் துறைசார் அதி காரிகளும் கலந்து கொண்டனர்.





# மாதர் அபிவிருத்திப் பயிற்சி நிலையத்தின் பிரதேச மட்ட கண்காட்சியும், விற்பனையும்

(எம்.எம்.றம்ஸீன்)

கிழக்கு மாகாண கிராம அபி விருத்தித் திணைக்களத்தின் கீழ் மட் டக்களப்பு ஏறாவூர் பற்று பிரதேச செயலக பிரிவில் இயங்கிவரும் செங்கலடி மற்றும் கரடியனாறு மாதர் அபிவிருத்திப் பயிற்சி நிலைய வருடாந்த பிரதேச மட்ட கண்காட்சி மற்றும் விற்பனை நிகழ்வு செங்கலடி மாதர் அபிவிருத்தி பயிற்சி நிலையத்தில் நடைபெற்றது.

ஏறாவூர் பற்று பிரதேச செயலாளர் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ் வில், பிரதம அதிதியாக கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்கள பணிப்பாளர் கலந்து கொண்டார்.

இங்கு உற்பத்தி செய்யப்பட்ட பொருள்கள் காட்சிப்படுத்தி விற்பனை செய்யப்பட்டன.

இந்த நிகழ்வில் மாவட்ட கிராம அபி விருத்தி உத்தியோகத்தர், பிரதேச செய லக பிரதி திட்டமிடல் பணிப்பாளர், கணக்காளர், நிருவாக உத்தியோ கத்தர், மாவட்ட சிரேஷ்ட தையல் போத னாசிரியை, இதன் உறுப்பினர்கள் என பலரும் கலந்து சிறப்பித்தனர்.